அசல் வழக்கு எண். 243/2013 தேதி. 01.12.2023

வா.சா.1 - பாலசுப்பிரமணியன்

2,7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 12 வரையான ஆவணங்களுக்கும் தாவா வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள சர்வே எண்களுக்கும் தாவா வழக்கு சர்வே எண்களுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.4/2014 வழக்கில் கண்ட சொத்துக்கள் வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. முத்துப்பிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 14 ஆவணம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் யார் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14 ஆவணத்தில் சர்வே எண்.386/1 ஏ மற்றும் 386/2 ஏ ஆகிய சொத்துக்கள் பட்டா எண்.335 ன் படி மா.முத்துப்பிள்ளை பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

2. எனது தரப்பு வா.சா.ஆ.14 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற முத்துப்பிள்ளை பெயரில் சர்வே எண்.386/1 ஏ மற்றும் 386/2 ஏ ஆகிய சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணத்தில் உள்ள செட்டில்மென்ட் பதிவேடு, ஜமபந்தி சிட்டா மற்றும் அடங்கல் கணக்கு ஆகியவற்றில் மேற்படி சொத்துக்கள் மா.முத்துப்பிள்ளை பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. முத்துப்பிள்ளையை நான் பார்த்ததில்லை. வருவாய் துறையில் என்னை விசாரிக்கவில்லை. நான் இவ்வழக்கை தவிர வேறு எங்கும் கையொப்பம் செய்துள்ளேனா என்று சரியாக தெரியவில்லை. வா.சா.ஆ.15 ஆவணம் பற்றி தெரியவில்லை. உறுதிமொழி பத்திரம் என்ன என்பது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.15 ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.

3. அதில் யார் யார் கையொப்பம் செய்துள்ளார் என்றும் தெரியாது. வா.சா.ஆ.15 ஆவணம் எந்த தேதியில் ஏற்பட்டது என்று தெரியவில்லை. வா.சா.ஆ.15 ஆவணம் ஏற்பட்ட போது யார் யார் உடன் இருந்தார்கள் என்று தெரியாது. வா.சா.ஆ.15 ஆவணத்தில் கைரேகை செய்துள்ளேன். அதில் ஒரு ரேகை தான் உள்ளது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். படிக்க தெரியாததால் விவரம் தெரியவில்லை. நிலம் எனக்கு உரியது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

நிலத்தின் சர்வே எண் எதுவும் தெரியாது. தாவா வழக்கிற்கு பின்னர் வா.சா.ஆ.15 ஆவணம் ஏற்பட்ட போது நான் உடன் இருந்தேனா என்று நியாபம் இல்லை.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/- P.பாலமுருகன்

**Principal District Munsif,**
**Kulithalai.**